முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S. No. 247/2018

தேதி : 28-07-2023

(வா.சா.1) – குமரேசன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை :

தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு பட்டாவை மட்டும் பார்த்து பரிசீலனை செய்து கிரையம் வாங்கினேன். கிரையம் வாங்குவதற்கு முன்பு சொத்தை அளந்து பார்க்கவில்லை. சொத்தை சர்வேயர் மூலமாக அளந்து எல்கையை சரிபார்த்து கிரையம் வாங்கவில்லை. வா.சா.ஆ.2 கிரையப் பத்திரத்தில் எனக்கு கிரையம் கொடுத்தவர் "என் தகப்பனார் சுப்பையா சேர்வை அவர்களுக்கு பூர்வீக பாத்தியப்பட்டும் அவர் அனுபவித்து வந்து அவர் காலஞ்சென்றதன் மேல் அவருடைய வாரிசான எனக்கும், என் உடன் பிறந்த சகோதரரான கந்தசாமி ஆகியோருக்கு பாத்தியப்பட்டும் எனது பெயரிலும் எனது சகோதரர் கந்தசாமி பெயரிலும் 944 நிர் கூட்டு மனை வரி பட்டா ஏற்பட்டும்" என்றும் சொல்லியிருப்பது தவறு என்றால் சரிதான். எனக்கு கிரையம் கொடுத்தவர் மற்றும் அவரது சகோதரர் கிரையம் வாங்கியதற்கான கிரையப் பத்திரத்தின் நகலை வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளேன். சொத்தை கிரையம் பெற்ற பிறகு தான் வழக்கு தாக்கல் செய்வதற்காக வா.சா.ஆ.1 நகலை பெற்றுள்ளேன். கிரையத் தொகையை D.D. மூலமாக கொடுக்கவில்லை, ரொக்கமாக தான் கொடுத்தேன். அவரது மருத்துவச் செலவிற்காக கேட்டதால் ரொக்கமாக கொடுத்தேன். எந்தெந்த தேதிகளில் எவ்வளவு தொகை அவ்வாறு அவரது மருத்துவ செலவிற்கு கொடுத்தேன்

என்ற விபரங்கள் என்னிடம் இல்லை. நான் அவ்வாறு மருத்துவ செலவிற்கு பணம் கொடுத்திருந்தால் இன்னென்ன தேதிகளில் இவ்வளவு ரூபாய் கொடுத்தேன் என்ற விபரத்தை பத்திரத்தில் சொல்லியிருக்கவேண்டும் என்றால் சரியல்ல. குறைந்தபட்சம் மருத்துவ செலவிற்கு கிரையத் தொகையை பெற்றுக்கொண்டதாக சொல்லியிருக்க வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய வீட்டில் தான் ஜெயக்கொடி குடியிருந்தார். வா.சா.ஆ.2 கிரையப் பத்திரத்தில் உள்ள ஜெயக்கொடியின் ஆதார் அட்டை முகவரி அந்த வீட்டிற்குரியது தான் என்றால் சரியல்ல. அது வேறு வீட்டு முகவரி ஆகும். எந்த நபருக்கும் அவர் குடியிருக்கும் வீட்டிற்கு தான் ஆதார் அட்டை கொடுப்பார்கள் என்றும், ஒத்தி வாங்கியுள்ள வீட்டிற்கு கொடுக்கமாட்டார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள வீட்டில் ஜெயக்கொடி குடியிருந்தார் என்று காட்டுவதற்கு வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை போன்ற அரசு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. வீட்டுவரி ரசீது தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் உள்ள வீட்டில் ஜெயக்கொடி ஒரு நாளும் குடியிருக்கவில்லை என்றும், பிரதிவாதி குடும்பத்தினர் தான் அதில் குடியிருந்தார்கள் என்று சொன்னால் இருவரும் சேர்ந்து தான் குடியிருந்தார்கள், அவர்களுக்குள் சண்டை ஏற்பட்டதால் ஜெயக்கொடி விலகிபோய்விட்டார். வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தின்படி 200 சதுர அடி மட்டும் தான் கிரையம் வாங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். இருவருக்கும் சரிபாதி உள்ளதாக அந்த கிரையப் பத்திரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் சரிபாதி என வைத்துக்கொண்டாலும் ஜெயக்கொடிக்கு 100 சதுர அடி தான் பாத்தியம் உண்டு என்றும், ஆனால் 300 சதுர அடி என்று போட்டு வா.சா.ஆ.2 கிரையப் பத்திரத்தில் கிரையம் வாங்கியுள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

கிரையம் கொடுத்த ஜெயக்கொடி எனக்கு பெரியம்மா. அவர் தாவா சொத்தில் ஒரு நாளும் குடியிருக்கவில்லை என்றும், வருவாய் துறை ஆவணங்களில் ஜெயக்கொடியின் பெயர் இருப்பதை பயன்படுத்தி அவருக்கு கிரையத் தொகை எதுவும் கொடுக்காமல் மலரணையாக வா.சா.ஆ.2 கிரையப் பத்திரம் எழுதி வாங்கியுள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல. 15.05.2017 தேதி வா.சா.ஆ.2 படி சொத்தை கிரையம் பெற்று 08.09.2017 தேதி வா.சா.ஆ.3 ஈடுகடன் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளேன். 19.09.2017 தேதி அந்த ஒத்தியை திருப்பி பணம் வரவு வைத்துள்ளோம். தாவா சொத்து பிரதிவாதி வகையறாவிற்கு பாத்தியப்பட்டது என்றும், தாவா சொத்தை அபகரிப்பதற்காக இந்த ஆவணங்களை நாங்கள் உற்பத்தி செய்துள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல. (பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது).

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2023.07.28 16:28:34 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.